# இந்த நூற்றாண்டு இந்தியர்களுக்கே

## கலக்கும் கத்தார் வங்கி தலைமை செயல் அதிகாரி

வறுமையால் குடும்பத்திற்கு வருவாய் ஈட்டவும், தன் கல்வியை வளர்த்து கொள்ளவும் சிறிய வயதில் சைக்கிளில் சென்று வீடு வீடாக நாளிதழை வினியோகித்து நாட்டின் முதல் குடிமகனாக உயர்ந்தவர் மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம். அதுபோன்றதொரு வறுமையால் சிறிய வயதில் சைக்கிளில் வீடு வீடாக சென்று தினமலர் நாளிதழை வினியோகித்ததுடன், கிடைத்த வேலையை செய்து குடும்பத்திற்கு உதவியதுடன், அதன் மூலம் தன் கல்வியை தொடர்ந்து இன்று உலக எண்ணெய் வளம் மிகுந்த கத்தார் நாட்டின் தோகா வங்கியின் தலைமை செயல் அதிகாரியாக உயர்ந்து உலகத்தை வலம் வந்து கொண்டிருக்கிறார் முனைவர் ஆர்.சீதாராமன்.

மேல்நிலையை கல்வியை கற்கவே கஷ்டப்பட்டவர் தன் உழைப்பாலும், தாயார் கொடுத்த ஊக்கத்தாலும் ஏழு முனைவர் பட்டங்களை பெற்றிருக்கிறார். உலகிலுள்ள 192 நாடுகளில் 106 நாடுகளில் இது வரை கால் பதித்திருக்கிறார். இவரது சேவையை பாராட்டி இந்திய அரசின் 'பிரவாசி பாரதிய சம்மான்' விருதை வழங்கி கவுரவப்படுத்தியிருக்கிறார் அப்போதைய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி. வங்கி தலைமை செயல் அதிகாரியாக திகழ்ந்தாலும் கூட இவரது கலைச்சேவையையும் பாராட்டி தமிழக அரசு கலைமாமணி விருது வழங்கியிருக்கிறது.

கடந்த 12 ஆண்டுகளில் சர்வதேச வங்கியாளர்கள் சார்பில் மத்திய கிழக்கு ஆசிய நாடுகளில் சிறந்த தலைமை செயல் அதிகாரி விருதை ஐந்து முறை பெற்றிருக்கிறார். உலகின் மிகச் சிறந்த பொருளாதார நிபுணர்களில் ஒருவர். இப்படி இவரை பற்றி அடுக்கி கொண்டே செல்லலாம். சமீபத்தில் கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திராவில் நடந்த கிராம முன்னேற்ற திட்ட கல்லூரி மாணவியருக்கான ஆளுமை பயிற்சி முகாமில் பங்கேற்க வந்தவருடன் தினமலர் சண்டே ஸ்பெஷலுக்காக பேசியதிலிருந்து...

### மண்ணும் மனசும்

**• வறுமையிலும் சாதித்தது எப்படி?**

தஞ்சை அருகிலுள்ள தேரேழுந்தூர் தான் என் சொந்த ஊர். மாயவரம் தேசிய பள்ளியில் தான் படித்தேன். இளங்கலை வணிகவியலில் தங்கப்பதக்கம் பெற்று சார்ட்டர்ட் அக்கவுன்டன்ட் முடித்தேன். அப்பா சமஸ்கிருத ஆசிரியர். 1969ல் தமிழகத்தில் நடந்த ஹிந்தி எதிர்ப்பு போராட்டம் எதிரொலியாக அவரது வேலை பறிபோனது. இதனால் குடும்பத்திற்கு உதவவும், படிப்பை தொடரவும் சைக்கிளில் நாளிதழ்கள் விநியோகித்திருக்கிறேன். தனியார் நிறுவனங்களில் பணி புரிந்திருக்கிறேன். அதில் கிடைத்த தொகையை குடும்பத்திற்கு வழங்கியதுடன், என் கல்வி செலவையும் கவனித்து கொண்டேன்.

**• தோகா வங்கி குறித்து?**

20 நாடுகளில் எங்கள் வங்கி கிளைகள் உள்ளன. இந்தியாவில் மும்பை, கொச்சின், சென்னையில் கிளைகள் உள்ளன. ஆண்டுக்கு 27 பில்லியன் டாலர் வரை பணப்பரிமாற்றம் நடக்கிறது.

**• வங்கிகள் செயல்பாடு எப்படியுள்ளது?**

உலக அளவில் பொருளாதார தேக்க நிலையுள்ளது. வியாபாரம், வர்த்தக பிரச்னைகள், அமெரிக்கா, சீனாவில் ஏற்பட்டுள்ள வர்த்தக தடைகள் எதிரொலியாக இந்நிலை. உலக பொருளாதாரம் 3.9 சதவீதத்தில் இருந்து 3.5 ஆக சரிவடைந்துள்ளது. இது மேலும் சரிய வாய்ப்புள்ளது. ஆனாலும் பொருளாதார வளர்ச்சியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. ஜி.டி.பி., வாங்கும் திறன் போன்றவைகளில் மத்திய அரசு செய்த பரிமாணங்கள் வளர்ச்சி பாதையில் கொண்டு செல்கிறது. அடிப்படை பொருளாதார நியமங்கள் மூலம் 2030ல் இந்தியா பொருளாதாரம் பத்து திரில்லியன் அளவுக்கு முன்னேறும். 2022க்குள் உலக பொருளாதாரத்தில் இந்தியா 3வது இடத்திற்கு உயர்ந்து விடும்.

**• இளைஞர்களுக்கு சொல்ல விரும்புவது?**

எந்த படிப்பும் சோடை கிடையாது என இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். கடின உழைப்பும், விடா முயற்சியும் இருந்தால் சாதிக்கலாம். இந்தியாவின் பெரிய பலமே இளைஞர்கள் வளம் தான். இந்த நூற்றாண்டு இந்தியர்களுக்கு தான் சொந்தம்.

**• தங்கத்தில் முதலீடு?**

தங்கம் இந்தியாவில் சென்டிமென்டல் கரன்ஸியாக உள்ளது. இங்கு தங்கம் நாணயமாக எண்ணப்படுகிறது. அதன் விலை உச்சத்தை தொட்டுக் கொண்டுள்ளது. தங்கத்தில் முதலீடு செய்வதை தொடர்வதா என்றால் என்னை பொருத்தவரையில் கூடாது என்பேன்.

**• கிரீன் பாங்கிங் திட்டம் எப்படி உதயமானது?**

வாழ்க்கையில் ஏற்ற இறக்கம் இருக்கலாம். தொலைநோக்கு பார்வையுடன் சென்றால் எந்த தாக்கம் ஏற்பட்டாலும் அதிலிருந்து மீளலாம். இது மனிதருக்கு மட்டுமின்றி நாட்டிற்கும் பொருந்தும். உலகம் பசுமையாக மாற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டால் தான் உலகம் பசுமையாக மாறும். மாறி வரும் தட்பவெப்ப நிலையால் கடல் சீற்றங்கள், வனப்பகுதி அழிவால் வனவிலங்குகள் குடியிருப்புகளுக்குள் புகுவது போன்றவை நடக்கின்றன. இந்நிலை மாற பசுமை மயம் வேண்டும். வங்கியில் முதலீடு செய்யும் தொகையில் ஒரு பகுதியை நீராதார மேம்பாடு, சூரியசக்தி ஆற்றல், பயோ மாஸ் போன்ற திட்டங்களுக்கு ஒதுக்க முயற்சித்தேன். இதன் மூலம் தட்பவெப்ப மாற்றத்தை சரி செய்ய முடியும். அதற்காக இத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

இவரை வாழ்த்த seetharaman@dohabank.com.qa

மேஷ்பா
கண்



**பொழுதுபோக்கு**
மற்றவர்களுக்கு உதவுவது

**பிடித்த உணவு**
இட்லி

**செல்ல விரும்பும் நாடு**
இந்தியா, குறிப்பாக தஞ்